# விசுவாசியுங்கள், கர்த்தர் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்



மோகன் சி. லாசரஸ்



# விசுவாசியுங்கள், கர்த்தர் காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்

"**...காரிய சித்தியோ கர்த்தரால் வரும்.**" நீதி. 16:33.

இது, கர்த்தர் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தம். **கர்த்தர், தான் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதில் உண்மை உள்ளவராக இருக்கிறார்!**

மனிதர்களில் அனேகர், "நான் உனக்கு அதைச் செய்வேன்! இதைச் செய்வேன்!" என்று வாக்குக் கொடுப்பார்கள்! ஆனால் சிலர் அதை மறந்து போவார்கள்! சிலர் மாறிப் போவார்கள்! சிலருக்கு, "வாக்குக் கொடுத்தபடி அதைச் செய்ய வேண்டும்." என்று விருப்பம் இருந்தாலும், சில சமயங்களில் அதைச் செய்ய முடியாத சூழ்நிலை வந்து விடும்! இப்படியாக, மனிதர்களுடைய வாக்கில், மாற்றங்கள் வருவதைப் பார்த்திருக்கிறோம்.

ஆனால் கர்த்தர் வாக்குக் கொடுத்து விட்டால், எந்த சூழ்நிலையிலும் மாறவே மாட்டார்! அவர் என்ன வாக்குக் கொடுத்தாரோ, அதை நிறைவேற்றுவதில் உண்மை உள்ளவராக இருக்கிறார்!

"நான் அன்றைக்கு உனக்கு வாக்குக் கொடுத்தேன்! ஆனால், இப்பொழுது அதை என்னால் நிறைவேற்ற முடியாது!" என்று சொல்கிறவரல்ல கர்த்தர்! அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்! அவரால் எதையும் செய்ய முடியும்! என்ன வாக்குக் கொடுத்தாரோ, அதை நிறைவேற்றுவதற்கு அவர் உண்மை உள்ளவராக மாத்திரமல்ல, வல்லமை உள்ள கர்த்தராகவும் இருக்கிறார்!

என்னுடைய 40 வருட ஊழியப் பாதையில், அதை நான் அறிந்திருக்கிறேன். நன்றியோடு அதை நினைத்து நினைத்து, ஆனந்தக் கண்ணீரோடு கர்த்தரை நான் துதிக்கிறேன்.

தேவனுடைய வீடாக இருக்கட்டும்! தேவனுடைய கூடாரமாக இருக்கட்டும்! ஜெப மலையாக இருக்கட்டும்! இன்றைக்கு இவைகள் எல்லாம், '**கர்த்தர் உண்மை உள்ளவர்!**' என்பதற்கு சாட்சிகளாக இருக்கிறது!

ஆகவே, வாக்குக் கொடுத்ததை நிறைவேற்றுவதில் கர்த்தர் உண்மை உள்ளவராக இருக்கிறபடியினால், அதை **விசுவாசித்து**, அந்த வாக்குத்தத்தத்தை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, **அந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள, அனுதினமும் அதைச் சொல்லி நீங்கள் ஜெபிக்க வேண்டும்**.

சந்தேகப்படாதபடி, "இந்த வாக்குத்தத்தத்தை கர்த்தர் எனக்குக் கொடுத்திருக்கிறார். என்னுடைய காரியங்களை எல்லாம் அவர் வாய்க்கப் பண்ணுவார்." என்று **விசுவாசித்து**, அதைச் சொல்லிச் சொல்லி **நீங்கள் ஜெபிக்கும்போது**, **அந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்கள்** உங்கள் வாழ்க்கையில் **நிறைவேறுவதை உங்களால் பார்க்க முடியும்!**

'**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியமே கர்த்தருடைய வாக்குத்தத்தத்தில்தான் நிற்கிறது!

முதலாவது, **தேவனுடைய வீடு!**

'தேவனுடைய வீடு' திட்டத்தை கர்த்தர் கொடுத்து, அதைக் கட்டி முடிக்கிற தருணம் வந்தபோது, தினந்தோறும் நாங்கள் ஒரு இடத்தில் கூடி, அதனுடைய தேவைகளுக்காக ஜெபிப்பதுண்டு. அந்தத் திட்டம் நிறைவேறுவதற்காக கர்த்தர் வாக்குக் கொடுத்தார்.

35 வருடங்களுக்கு முன்பாக, தேவனுடைய வீட்டை நாங்கள் பெரிய ஒரு விஷயமாகவே நினைத்தோம்!
யோசித்துப் பார்த்தபோது, எங்களுக்கு அது ஒரு பிரம்மாண்டமாகத்தான் தெரிந்தது! ஆனால், ஒருநாள் ஜெப நேரத்தில் கர்த்தர் சொன்னார்: "என் மகனே, இது ஆரம்பம்தான். இந்த தேவனுடைய வீட்டின் நான்கு திசைகளிலும் நீ இடம் கொண்டு பெருகுவாய்! எல்லைகள் விரிவாகும்!" என்று வாக்குக் கொடுத்தார்.

கர்த்தர் இப்படியாக வாக்குக் கொடுத்தபடியினால், அதற்காக நாங்கள் ஜெபித்துக் கொண்டிருந்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, தேவனுடைய வீடு கட்டி முடித்து பிரதிஷ்டை செய்வதற்கு முன்பாகவே,

இடத்தைக் கொடுக்க ஆரம்பித்து விட்டார்! தேவனுடைய வீடு நிரம்பி வழியும்படி ஜனங்கள் ஜெபத்திற்காக வர ஆரம்பித்தவுடனே, ''அடுத்து என்ன செய்வது ஆண்டவரே?'' என்று கர்த்தரிடத்தில் கேட்டபோது, தேவனுடைய வீட்டின் பின் பக்கத்தில் இருக்கிற இடத்தைக் கொடுத்தார்!

இன்றைக்கு தேவனுடைய வீட்டின் நான்கு பக்கங்களிலும் கர்த்தர் இடங்களைத் தந்திருக்கிறார். அதைப் பார்க்கும்போது, மிகுந்த ஆச்சரியமாகவே இருக்கிறது! **கர்த்தர் எவ்வளவு உண்மை உள்ளவர் பாருங்கள்!**

35 வருடங்களுக்கு முன்பாக, ஊழியத்தை ஆரம்பித்த கொஞ்ச நாட்களுக்குள்ளாக இடத்தைக் கொடுத்து, தேவனுடைய வீடு கட்டுவதற்கான வரை படத்தையும் கர்த்தர் கொடுத்தார். ''இதைக் கட்டி முடிப்பதற்கு இத்தனை லட்ச ரூபாய் ஆகும்!'' என்று பொறியாளர்கள் சொன்னபோது, ''ஐயோ, இத்தனை லட்சம் பணத்திற்கு நாம் எங்கே போவது?'' என்று, எனக்குள் ஒரு பயம் வந்து விட்டது!

நான் தேவ சமூகத்தில் அந்த வரை படத்தை வைத்து, ஜெபிக்க ஆரம்பித்தேன். சில மணி நேரங்கள் காத்திருந்தபோது, ''மகனே, வெள்ளியும் என்னுடையது! பொன்னும் என்னுடையது! (ஆகாய் 2:8). இந்த தேவனுடைய வீடு கட்டுவதற்காக, நீ யாரிடத்திலும் போய் கையேந்தி நிற்க வேண்டிய அவசியமே வராது. திறப்பின் வாசல் ஜெபத்திற்கு வருகிறவர்களிடத்தில் கூட நீ இதற்கென்று காணிக்கை எடுக்க வேண்டிய அவசியம் வராது. நான் யார் யார் உள்ளத்தில் ஏவுதல் கொடுப்பேனோ, அவர்களாகவே கொண்டு வந்து கொடுப்பார்கள்! ஆகவே நீ பயப்படாதே. நான் அதை உனக்குக் கட்டி முடித்துத் தருவேன். உனக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை மட்டும் நீ நிறைவேற்றிக் கொண்டிரு.'' என்று சொல்லி, கர்த்தர் வாக்குக் கொடுத்தார்.

எனக்கு அன்பானவர்களே, நீங்களும் தேவ சமூகத்தில் காத்திருந்து, ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக **உபவாசம் பண்ணி கருத்தாக ஜெபித்தால், கர்த்தர் நிச்சயமாக பதில் கொடுப்பார்!**

கர்த்தர், எங்களைப் போன்ற ஊழியக்காரர்களிடத்தில் மட்டும் பேசுகிற தேவனல்ல. உங்களோடும் பேசுவார்! கர்த்தருடைய குரலை உங்களால் கேட்க முடியவில்லையா? "கர்த்தர் என்னோடும் பேசுவார்!"

என்று நீங்கள் **முதலில் விசுவாசிக்க வேண்டும்**. காரணம், அவர் பட்சபாதம் உள்ள தேவனல்ல. உங்களாலும் அந்த அனுபவத்தைப் பெற்று வாழ முடியும்.

ஊழியத்தின் ஆரம்பக் காலத்தில், இந்த ஊழியத்தைப் பற்றி அவ்வளவு அதிகமாக மக்களுக்குத் தெரியாது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில்தான் ஊழியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. திறப்பின் வாசல் ஜெபத்தில் கூட, அதற்காக காணிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில்தான், தேவனுடைய வீட்டை கர்த்தர் மிக அற்புதமாகக் கட்டி முடித்துக் கொடுத்தார்.

ஒரு சமயம், சவுதி அரேபியாவில் வசித்த ஒரு தம்பதியினர், நமது '**இயேசு விடுவிக்கிறார்**' பத்திரிக்கையை வாசித்துக் கொண்டிருந்தபோது, இந்த ஊழியத்திற்குக் காணிக்கை அனுப்பி வைக்கும்படியாக கர்த்தர் ஏவியபடியினால், அதை அனுப்பி வைத்து விட்டு, நாலுமாவடி கிராமத்தில் நடைபெறுகிற நமது ஊழியத்தைப் பார்த்து விட்டுப் போக வந்திருந்தார்கள்.

அவர்கள் இங்கு நடைபெறுகிற ஊழியங்களை எல்லாம் பார்த்து விட்டு, ''பிரதர், இந்தச் சின்னக் கிராமத்தில், இவ்வளவு மகிமையான ஒரு ஊழியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! சவுதி அரேபியாவில் அனேக தேவ பிள்ளைகள் இருக்கிறார்கள். இந்த ஊழியத்தைப் பற்றி அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது. ஒரு 'நன்கொடைப் புத்தகம்' மாத்திரம் அச்சடித்துக் கொடுங்கள். நான் அங்கு போய் பணம் பிரித்து, தேவனுடைய வீடு கட்டுவதற்கு அனுப்பி வைக்கிறேன்.'' என்று சொன்னார்கள்.

அதற்கு நான், ''யாரிடத்திலும் நன்கொடை கேட்கக் கூடாது.' என்று கர்த்தர் சொல்லி இருக்கிறார். ஆகவே, நாங்கள் இதற்கென்று நன்கொடைப் புத்தகம் எதுவும் அச்சடிக்கவில்லை.

உங்கள் உள்ளத்தில் கர்த்தர் ஏவியபடியினால், நீங்கள் கொண்டு வந்து காணிக்கை கொடுத்தீர்கள்! அதேபோல யார் யாருடைய உள்ளத்தில் கர்த்தர் ஏவுவாரோ, அவர்கள் மூலமாக இதன் தேவைகள் சந்திக்கப்படும். நாங்கள் நடத்துகிற எந்தக் கூட்டத்திலும் கூட இதற்காகக் காணிக்கை எடுப்பதில்லை.'' என்று சொன்னேன். அவர்கள் என்னை மிகுந்த ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

அந்த நாட்களில் கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டத்திலுள்ள பல இடங்களுக்கு ஊழியத்திற்குச் செல்கிற சமயங்களில், கூட்டம் முடிந்த பிறகு ஜனங்கள் ஜெபக் குறிப்பு எழுதிக் கொடுக்கும்போது, காணிக்கையையும் சேர்த்து என்னிடத்தில் கொடுப்பார்கள்.

தேவனுடைய வீட்டிற்கென்று ஜனங்கள் கொடுத்த காணிக்கையை கணக்குப் பார்த்தபோது, தங்கமும், வெள்ளியும் கிலோ கணக்கில் வந்திருந்தது! தங்கத்தையும், வெள்ளியையும் நாங்கள் காணிக்கை எடுக்கவே இல்லை. "தங்கமாகவோ, வெள்ளியாகவோ காணிக்கை கொடுங்கள்." என்று சொல்லி, நாங்கள் எந்த விதமான அறிவிப்பும் கொடுக்கவில்லை.

திறந்து பார்த்தால், நிறைய தங்க வளையல்கள், தங்கச் சங்கிலிகள் இருக்கும்! ஆனால், சிலவற்றுக்கு முகவரி கூட இருக்காது. 'யார் கொடுத்தது?' என்று தெரியாது. அவர்களுக்கு ஒரு நன்றிக் கடிதம் அனுப்புவதற்குக் கூட முடியாது. 'எந்தத் தேதியில், எங்கிருந்து வந்தது?' என்று எல்லாவற்றையும் குறித்து ஒரு நோட்டில் எழுதி, அதை இன்றைக்கு வரைக்கும் ஒரு சாட்சியாக வைத்திருக்கிறோம்.

இது எதைக் குறிக்கிறது? "வெள்ளியும் என்னுடையது! பொன்னும் என்னுடையது!" என்று வாக்குக் கொடுத்த கர்த்தர் வாக்கு மாறாதவர்!

ஒரு சமயம், ஒரு சகோதரி தன் கை நிறைய நகைகளைக் கொண்டு வந்து, என்னிடத்தில் கொடுத்தார்கள். நான் பயந்து, அதை வாங்க மறுத்தேன். ''ஏன் இவ்வளவு நகைகளைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்று நான் கேட்டபோது, ''நான் ஒரு பொருத்தனை பண்ணியிருந்தேன். கர்த்தர் எனக்கு ஒரு அற்புதம் செய்தார்! அந்தப் பொருத்தனையின்படி இதை ஏற்றுக் கொண்டு, தேவனுடைய வீட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.'' என்று சொல்லி, என்னிடத்தில் கொடுத்தார்கள்.

அதற்கு நான், ''இது உங்கள் கணவருக்குத் தெரியுமா? அவருக்குத் தெரியாமல் இதை நான் வாங்க மாட்டேன். நீங்கள் இருவரும் சேர்ந்து வந்து கொடுத்தால், நான் வாங்கிப் பயன்படுத்துகிறேன். நீங்களாக உங்கள் கணவருக்குத் தெரியாமல் கொண்டு வந்து தரக் கூடாது.'' என்று சொன்னேன்.

அப்பொழுது அவர்கள் சிரித்து கொண்டே, ''என் கணவருக்கும் தெரியும். நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்துதான் பொருத்தனை செய்திருந்தோம். அவரிடத்தில் சொல்லி விட்டுத்தான், நான் இதைக் கொண்டு வந்து உங்களிடத்தில் கொடுக்கிறேன்.'' என்று சொல்லி, என்னிடத்தில் கொடுத்தார்கள். ஆகவே, நான் அதை வாங்கிக் கொண்டு வந்து, ஊழிய அலுவலகத்தில் கொடுத்து விட்டேன்.

நான் அதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறேன். '**வாக்குக் கொடுத்த கர்த்தர் எவ்வளவு உண்மையுள்ளவர்!**' என்று பாருங்கள்!

எனக்கு அன்பானவர்களே, "கர்த்தர் கொடுத்த இந்த வாக்குத்தத்தம் எனக்குரியது." என்று **விசுவாசியுங்கள்**. "கர்த்தர் எனக்கு வாக்குக் கொடுத்தபடியே செய்வார்!" என்று **விசுவாசியுங்கள்.**

**"காரிய சித்தியோ கர்த்தரால் வரும்.**" நீதி. 16:33.

இன்றைக்கு உங்களுக்கு என்ன காரியம் வாய்க்க வேண்டும்? உங்கள் தொழில் காரியமா? பிள்ளைகளுடைய மேற்படிப்பா? அல்லது அவர்களுடைய திருமணக் காரியமா? கர்ப்பத்தின் கனியா? வேலை இல்லையா? உங்கள் ஊழியத்தின் காரியமா? வீடு கட்டுகிற காரியமா?

"எந்தக் காரியத்தை எடுத்தாலும், தடைப்பட்டு, தடைப்பட்டுப் போகிறதே!" என்று அங்கலாய்த்துக் கொண்டு இருக்கிறீர்களா?

இன்றைக்கு, இந்தச் செய்தியின் மூலமாக கர்த்தர் உங்களோடு கூடப் பேசுகிறார்:

**"என் மகனே(ன)ள, உன் காரியத்தை நான் சித்திக்கப் பண்ணுவேன். நீ என்னதான் முயற்சிகளைச் செய்து, எவ்வளவுதான் பிரயாசப் பட்டாலும், கர்த்தராகிய நானே அதை வாய்க்கப் பண்ணுவேன்.**" என்று **கர்த்தர் சொல்கிறார்.**

உங்கள் காரியம் கர்த்தரால் வாய்க்கும்!

நம்முடைய காரியங்கள் சித்தி பெற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

# கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்யுங்கள்!

**“...தேவன் அவன் (உசியா) காரியங்களை வாய்க்கச்செய்தார்.”** **2 நாளா. 26:5.**

“யூதா தேசத்தினுடைய ராஜாவாக இருந்த, ‘**உசியா**’ செய்த காரியங்களை எல்லாம் கர்த்தர் வாய்க்கச் செய்தார்.” என்று பரிசுத்த வேதாகமம் குறிப்பிடுகிறது.

ஒரு பெரிய தேசத்தை ஆள்கிற ராஜா, அந்த தேசத்திற்காக அனேகக் காரியங்களைக் குறித்து திட்டம் செய்திருக்கக் கூடும். அந்த ராஜா செய்ய நினைத்த, செய்ய முயற்சித்த காரியங்களை எல்லாம் கர்த்தர் வாய்க்கப் பண்ணினார்.

அதேபோல உங்கள் வாழ்க்கையில், நீங்கள் சொந்தமாக ஒரு வீடு கட்ட ஆரம்பித்து, அதை முடிக்க முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறீர்களா? **கலங்காதீர்கள், கர்த்தர் அதை உங்களுக்கு முடித்துத் தருவார்!**

“ஒரு தொழிலை ஆரம்பிக்க முடியாமல், தடுமாற்றமாக இருக்கிறதே!” என்று கலங்கிப் போய் இருக்கிறீர்களா? **கலங்காதீர்கள்**, கர்த்தர் அதை உங்களுக்கு வாய்க்கப் பண்ணி, ஆசீர்வாதமாக முடித்துத் தருவார்!

“பிள்ளைகளின் திருமணக் காரியம் பாதியிலேயே தடைப்பட்டு, தடைப்பட்டுப் போகிறதே!” என்று வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கிறீர்களா? **பயப்படாதீர்கள்**, கர்த்தராகிய தேவன் எல்லாத் தடைகளையும் மாற்றி, உங்கள் பிள்ளைகளின் திருமணக் காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்!

“என் கடன் பிரச்சனை மாறி விடும்!’ என்று நினைக்கிறேன். ஆனால், மாறவே மாட்டேன் என்கிறது! கடனை அடைப்பதற்கு எத்தனையோ முயற்சிகளை எடுக்கிறேன். ஆனால் அது வாய்க்கவே மாட்டேன் என்கிறது!” என்று வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கிறீர்களா? **கலங்காதீர்கள்**, கர்த்தர் அதை வாய்க்கப் பண்ணுவார்!

‘**உசியா**’ என்கிற ராஜாவின் வாழ்க்கையில், ‘அவர் செய்த எல்லாக் காரியங்களையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணினார்!’ என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. காரணம் என்ன?

**"...யூதா ஜனங்கள் எல்லாரும் பதினாறு வயதான உசியாவை அழைத்துவந்து, அவனை அவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினார்கள்."** 2 நாளா. 26:1.

**"உசியா ராஜா தன் தகப்பனாகிய அமத்சியா செய்தபடியெல்லாம் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்."** என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. **(2 நாளா. 26:4).**

உசியா, தன்னுடைய 16வது வயதில் ராஜாவாக்கப்பட்டார்!

எனக்கு அன்பானவர்களே, இந்தக் காலத்தில், ஒரு 16 வயது வாலிபனை, அரசியல்வாதிகள் இருக்கிற இடத்தில் கொண்டு போய் உட்கார வைத்தால் எப்படி இருக்கும்? அல்லது, ஒரு பெரிய கம்பெனிக்கு முதலாளி ஆக்கினால் எப்படி இருக்கும்? அல்லது பெரிய ஒரு பதவியில் உட்கார வைத்தால் எப்படி இருக்கும்?

இன்றைக்கு 16 வயது நிரம்பிய வாலிபர்களுடைய மன நிலைமையை சற்று யோசித்துப் பாருங்கள். "நண்பர்களோடு சேர்ந்து எப்படி ஜாலியாக இருக்கலாம்? எதையெல்லாம் அனுபவிக்கலாம்? பைக்கில் போகலாமா? காரில் போகலாமா? விமானத்தில் பறக்கலாமா? இதைச் செய்யலாமா? அதைச் செய்யலாமா? நம்முடைய கையில் பணம் இருக்கிறது! நம்முடைய கையில் அதிகாரம் இருக்கிறது! எதை வேண்டுமானாலும் செய்யலாம்!" என்றுதானே யோசித்துக் கொண்டிருப்பான்!

பாருங்கள், 16 வயது நிரம்பிய உசியா ராஜாவுக்குக் கீழேதான், வயதில் மூத்த மந்திரிமார்கள், படைத் தலைவர்கள் எல்லோருமே இருந்திருப்பார்கள்! அவருக்குக் கீழேதான் ஒரு பெரிய தேசமே இருக்கிறது! அவர் என்ன சொன்னாலும், அதைச் செய்வதற்கு வேலையாட்கள் காத்திருக்கிறார்கள்! ஏனென்றால், அவர் ஒரு தேசத்தினுடைய ராஜா!

16 வயதில் ராஜாவாக்கப்பட்டு விட்ட உசியா ராஜாவை கர்த்தர் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் செய்வதை எல்லாம் வாய்க்கப் பண்ணினார். காரணம் என்ன?

உசியா ராஜா, கர்த்தருடைய பார்வைக்கு நலமானதை எல்லாம் செய்தார்! ஒருவேளை, "எப்பொழுதும் நான் கர்த்தருடைய பார்வைக்கு நலமானதை மட்டுமே செய்வேன்." என்று, அவர் ஒரு தீர்மானம் எடுத்திருக்க வேண்டும்.

உசியாவுக்கு, அவருடைய 16வது வயதில் தேசத்தின் முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டது! இப்பொழுது தேசத்தின் செல்வங்கள் அனைத்துமே அவருடைய கையில்! அவ்வளவு அதிகாரம் பெற்ற ஒரு

வாலிபன், “கர்த்தருக்குப் பிரியமானதைத்தான் நான் செய்வேன்!” என்று, ஒரு தீர்மானம் பண்ணினார்.

அப்படியே கர்த்தருடைய பார்வைக்கு உசியா ராஜா நலமானதைச் செய்தபடியினால், அவர் செய்ததை எல்லாம் கர்த்தர் வாய்க்கப் பண்ணினார்.

ஆனால் நாமோ, நமக்கு எது நன்மையாகத் தோன்றுகிறதோ, அதைத்தான் செய்கிறோம். அப்படித்தான் இன்றைக்கு சிலர், “உனக்கு எது நன்மையாகத் தோன்றுகிறதோ, அதைச் செய். உன் மனதிற்கு எது சரியாகத் தோன்றுகிறதோ, அதைச் செய்.” என்று ஆலோசனை கொடுக்கிறார்கள்.

அப்படியல்ல! நம்முடைய மனதிற்குள் தோன்றுவது எல்லாமே சரியாக இருக்காது. காரணம், மனிதர்களாகிய நம்முடைய இருதயம் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாக இருக்கிறது. **(எரேமியா 17:9)**. ஆனால், நம்மை சிருஷ்டித்த கர்த்தராகிய தேவன், நம் மீது மிகுந்த அக்கறை உள்ளவராக இருக்கிறார். அவர் நம்மை கவனித்துக் கொண்டிருக்கிற ஒரு நல்ல தேவன்! ஆகவே, அவருடைய பார்வைக்கு எது நலமாக இருக்கிறதோ, அதைச் செய்வதற்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

எனக்குப் பிரியமானவர்களே, **நீங்கள் செய்வதெல்லாம் ‘கர்த்தருடைய பார்வையில் சரியாக இருக்கிறதா?**’ என்று, சற்று யோசித்துப் பாருங்கள். “அதுதான் ஒழுங்காக ஆலய ஆராதனைக்குப் போகிறேனே! தவறாமல் வேதாகமத்தை வாசிக்கிறேனே! காணிக்கை எல்லாம் கொடுக்கிறேனே! ஞாயிற்றுக் கிழமைகளில் ஊழியத்திற்கெல்லாம் போகிறேனே!” என்கிறீர்களா?

எல்லாம் சரிதான்! ஆனால் உங்கள் வீட்டில், வேலையில், தொழிலில், உங்கள் நடக்கையில், **நீங்கள் செய்வதெல்லாம்**, **‘கர்த்தருடைய பார்வையில் சரியாக இருக்கிறதா?**’ என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். ஏனென்றால், கர்த்தர் உங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார்.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எப்படி நடக்கிறீர்கள்? எப்படிப் பேசுகிறீர்கள்? எங்கு போகிறீர்கள்? எங்கு வருகிறீர்கள்? உங்கள் குடும்பத்தை எப்படி நடத்துகிறீர்கள்? என்பதை எல்லாம் கர்த்தர் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் மனைவியினிடத்தில் எப்படிப் பேசுகிறீர்கள்? உங்கள் கணவரிடத்தில் எப்படி நடந்து கொள்கிறீர்கள்? உங்கள் பெற்றோரை எப்படி நடத்துகிறீர்கள்?

உங்கள் மாமியாரை, அல்லது உங்கள் மருமகளை நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள்? **உங்கள் வீட்டிற்குள் நீங்கள் பேசுகிற வார்த்தைகளை எல்லாம், கர்த்தர் கவனித்துக் கொண்டிருக்கிறார்** என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

"...**தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்**;" **(அப். 13:22)** என்று கர்த்தர் சொன்னார்.

ஏன் தெரியுமா? **தாவீது** கர்த்தருக்குப் பிரியமானதை எல்லாம் செய்தார். அதுதான் கர்த்தருக்குப் பிடித்தமான ஒரு காரியம். எதைச் செய்தாலும், 'கர்த்தர் அதை கவனித்துப் பார்க்கிறார்!' என்று, என்றைக்காவது ஒருநாள் நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எப்படி நடந்து கொள்கிறீர்கள்? என்பதை கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

"யார் என்னைப் பார்க்கா விட்டாலும், கர்த்தர் என்னை கவனித்துக் கொண்டிருக்கிறார்!" என்கிற உணர்வு நமக்குள் எப்பொழுதும் இருக்க வேண்டும். உங்கள் வேலையில் உண்மையாக இருக்கிறீர்களா? வாங்குகிற சம்பளத்திற்கு உண்மையாக இருக்கிறீர்களா? சரியான நேரத்திற்கு வேலைக்குப் போகிறீர்களா? கடினமாக உழைக்கிறீர்களா? என்பதை கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

எனக்கு அன்பானவர்களே, "அன்னிய பாஷை பேசி ஜெபிக்கிறேன்! உபவாசம் பண்ணுகிறேன்! ஆனால் என் காரியம் எதுவும் நடக்க மாட்டேன் என்கிறதே!" என்று புலம்பிக் கொண்டிருக்கிறீர்களா?

ஒன்றை அறிந்து கொள்ளுங்கள். **நீங்கள் கர்த்தருடைய பார்வைக்கு நலமானதைச் செய்தால்தான், உங்கள் காரியங்களை எல்லாம் கர்த்தரால் வாய்க்கப் பண்ண முடியும்**. ஒருவேளை, "நான் செய்கிறது எல்லாம் சரிதானே! அதில் என்ன தவறு இருக்கிறது?" என்று கூட நீங்கள் நினைக்கலாம். ஆனால் அந்தக் காரியம், "கர்த்தருடைய பார்வையில் சரிதானா?" என்று யோசித்துப் பாருங்கள்.

"எல்லோரும் செய்கிறார்கள்! நாமும் செய்தால் என்ன?" என்று நினைக்கிறீர்களா? நீங்கள் மற்றவர்களைப் போல் அல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள். 'கிறிஸ்தவர்கள்!' அதாவது தேவ பிள்ளைகளாகிய நாம், இந்த உலகத்தை விட்டு கர்த்தரால் பிரித்தெடுக்கப்பட்டவர்கள்! நாம் மற்றவர்களை விட மிகவும் வித்தியாசமானவர்கள்! "இப்படித்தான் வாழ வேண்டும்!" என்று, பரிசுத்த வேதாகமத்தில் கர்த்தர் நமக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்.

நாம் இந்த உலகத்தில் மற்றவர்களைப் போல் வாழ முடியாது. காரணம், நம்முடைய தேவன் வித்தியாசமானவர்! அவர் பரிசுத்தமுள்ளவர்! மகா நீதியுள்ளவர்! நியாயம் செய்கிறவர்! அவர் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, அவருடைய பார்வைக்கு நலமானதைத்தான் நாம் செய்ய வேண்டும்.

"ஜெபிக்கும்போது மட்டும்தான் கர்த்தர் நம்மைப் பார்க்கிறார்!" என்று நினைக்கிறீர்களா? அப்படியல்ல! **24 மணி நேரமும் அவருடைய கண்கள் நம் மேல் நோக்கமாக இருக்கிறது** என்பதை, எப்பொழுதும் உங்கள் நினைவில் பதித்துக் கொள்ளுங்கள்.

இன்றைக்கு, "இயேசுவே, இதுவரை நான் எப்படி வாழ்ந்திருந்தாலும், இந்த நாளிலிருந்து நீர் என்ன விரும்புகிறீரோ, அதைத்தான் நான் செய்வேன். நீர் விரும்புகிறபடிதான் நான் வாழ்வேன்." என்று ஒரு தீர்மானம் பண்ணுங்கள்.

**"உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்,"** **(சங்கீதம் 143:10)** என்று, **தாவீது** அழகான ஒரு ஜெபத்தைச் செய்தார்.

இந்த வேத வசனத்தின்படியே அனுதினமும் நான், "இயேசுவே, நான் செய்கிற எந்தக் காரியமும் உமக்குப் பிரியமானதாக இருக்க வேண்டும். மனிதர்கள் யாரையும் நான் பிரியப்படுத்த விரும்பவில்லை. உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதியும்." என்று சொல்லி ஜெபிக்கிறேன்.

ஆகவே, தேவ பிள்ளைகளாகிய நாம் கர்த்தர் விரும்புகிறதைத்தான் செய்ய வேண்டும். அவருக்குப் பிரியமானபடிதான் நாம் நடந்து கொள்ள வேண்டும். அவருக்குப் பிரியமானபடிதான் நாம் ஊழியம் செய்ய வேண்டும். அவருக்குப் பிரியமானபடிதான் நாம் சிந்திக்க வேண்டும். அவருக்குப் பிரியமானபடிதான் காரியங்களை நாம் செய்ய வேண்டும். அதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. காரணம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார்.

ஜெப அறையில் மாத்திரமல்ல, தேவாலயத்தில் மாத்திரமல்ல, ஒருநாளின் 24 மணி நேரமும் அவர் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். நம்மில் குற்றம் கண்டுபிடிப்பதற்காக அவர் நம்மைக் கவனிப்பதில்லை. அவர் நமக்கு ஒரு நல்ல தகப்பனாக இருக்கிறார்!

**"நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை."** **(எபிரெயர் 13:5)** என்று கர்த்தர் சொல்கிறார்.

"நீ எங்கு போனாலும் நான் உன்னோடு கூட வருவேன். 'எதற்கு?' என்றால், 'உன்னைப் பாதுகாப்பதற்கு!" என்று கர்த்தர் சொல்கிறார்.

காரணம், “இந்த உலகத்தில் எத்தனையோ தீய சக்திகள் இருக்கிறது! சத்துருவாகிய சாத்தான் இருக்கிறான்! உனக்கு விரோதமாக பல விதமான கண்ணிகளை அவன் வைக்கிறான்! சாத்தான் கொண்டு வருகிற இப்படிப்பட்ட தீமைக்கு உன்னை விலக்கிப் பாதுகாக்க வேண்டும். ஆகவே, 24 மணி நேரமும் நான் உன்னோடு கூட இருப்பேன்.” என்று கர்த்தர் உங்களைப் பார்த்துச் சொல்கிறார். இதை எப்பொழுதும் உங்கள் மனதில் பதித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் துக்கத்தோடு இருக்கிற சமயங்களில், எதாவது கிறிஸ்தவப் பத்திரிக்கையின் மூலமாகவோ, அல்லது கிறிஸ்தவத் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலமாகவோ, அல்லது வேத வசனங்களின் மூலமாகவோ, உங்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை கர்த்தர் அனுப்புவார். அதற்காகத்தான் அவர் உங்களை கவனித்துக் கொண்டே இருக்கிறார். **பயப்படாதீர்கள்! உங்கள் மீது அக்கறையுள்ள ஒரு தேவன் இருக்கிறார்!**

உங்களை ஆறுதல்படுத்த, உங்களை தைரியப்படுத்த, உங்களைப் பாதுகாக்க, உங்களை பெலப்படுத்த, சாத்தானுடைய கண்ணிக்கு உங்களை விலக்கித் தப்புவிக்க, பிசாசு உங்களை தொடாதபடிக்கு விலக்கிப் பாதுகாக்க, கர்த்தர் உங்களோடு கூட இருக்கிறார். நல்ல ஒரு தகப்பனாக, நல்ல ஒரு தாயாக, இரவும், பகலும் அவருடைய கண்கள் உங்கள் மீது நோக்கமாக இருக்கிறது.

“கர்த்தருடைய பார்வைக்கு நலமானதை உசியா ராஜா செய்ததினால், அவர் செய்தது எல்லாம் வாய்த்தது!” என்று, பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம். ஆகவே நீங்கள் முதலாவது, “இயேசுவே, உம்முடைய பார்வைக்கு நலமானதை நான் செய்ய வேண்டும்.” என்று சொல்லி, எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள்.

**கர்த்தருடைய பார்வைக்கு நலமானதைச் செய்ய உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும்!**

உங்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை கர்த்தர் அனுப்புவார். **பயப்படாதீர்கள்! உங்கள் மீது அக்கறையுள்ள ஒரு தேவன் இருக்கிறார்!**

# கர்த்தரைத் தேடுங்கள்!

**"...அவன் (உசியா) கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்தார்."** 2 நாளா. 26:5.

உசியா ராஜா கர்த்தரை தேடிய நாட்களில், அவர் செய்த எல்லாக் காரியங்களையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணினார்.

காரணம், முதலாவது உசியா ராஜா கர்த்தருடைய பார்வைக்கு நலமானதைச் செய்தார்!

இரண்டாவது, அவர் **கர்த்தரைத் தேடினார்!**

**"நீ உன் முழு இருதயத்தோடு என்னைத் தேடினால், நான் உனக்கு வெளிப்படுவேன்."** என்று கர்த்தர் சொல்கிறார். **(எரேமியா 29:13).**

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்? ஆசீர்வாதங்களையா? அல்லது அந்த ஆசீர்வாதங்களைக் கொடுக்கிற கர்த்தரையா? இன்றைக்கு தேவ பிள்ளைகளில் அனேகர், கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதங்களைத்தான் தேடுகிறார்கள். ஒரு ஜெபக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தேசத்திற்காக ஜெபிக்கப் போனால் கூட, "எனக்கு சுகம் வேண்டும்! ஆசீர்வாதம் வேண்டும்!" என்று ஒரு ஆசீர்வாதத்தைத்தான் தேடுகிறார்கள்.

ஆனால், இரகசியம் என்ன தெரியுமா? **ஆசீர்வாதத்தைக் கொடுக்கிற கர்த்தரைத் தேடுங்கள்**. கர்த்தரே உங்களுக்குள் வந்து விட்டால், நீங்கள் விரும்புகிற ஆசீர்வாதங்கள் எல்லாம் தானாகவே உங்களைத் தொடர்ந்து வரும்.

காரணம், அவருக்குள்தான் எல்லா ஆசீர்வாதங்களும் இருக்கிறது. அவரே ஞானம்! அவரே ஔஷதம்! அவரே ஐசுவரியம்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்குள் வந்து விட்டால், எல்லா ஆசீர்வாதங்களுமே நமக்குள்தான் இருக்கும். ஆகவே, வெறும் ஆசீர்வாதங்களை மாத்திரம் தேடாதபடி, அந்த ஆசீர்வாதங்களைக் கொடுக்கிற கர்த்தரைத்தான் நாம் தேட வேண்டும். அதைத்தான் கர்த்தரும் விரும்புகிறார்.

**"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற**

**நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து,...க்ஷேமத்தைக் கொடுப்பேன்.**" (**2 நாளா. 7:14**) என்று கர்த்தர் சொல்கிறார்.

"நீங்கள் என் பிள்ளைகள்தான்! என்னை விசுவாசிக்கிறீர்கள்! நான் உங்களைத் தெரிந்து கொண்டது உண்மைதான்! ஆனால், என் நாமம் தரிக்கப்பட்ட நீங்கள், உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி என் முகத்தைத் தேட வேண்டும்." என்று கர்த்தர் சொல்கிறார்.

கர்த்தர் **மோசே**யை வல்லமையாகப் பயன்படுத்தி, எகிப்து தேசத்தையே நடுங்கப் பண்ணினார்! மோசே தன் கையிலிருந்த கோலை நீட்டியபோது, தண்ணீர் எல்லாம் இரத்தமாக மாறியது! எண்ணிக்கைக்கு அடங்காத திரளான 'வெட்டுக் கிளி'களும்! 'பேன்'களும் வந்தன!

ஒரு கட்டத்தில் மோசேயை கர்த்தர் கெம்பீரமாக நடத்தி, 'கோலை நீட்டி கடலைப் பிளந்து விடு.' என்றார். கிட்டத்தட்ட 17 கிலோ மீட்டர் நீளத்திற்கு செங்கடல் இரண்டாகப் பிளந்து, இஸ்ரவேல் ஜனங்களுக்கு வழி விட்டது! சற்று யோசித்துப் பாருங்கள். அது எவ்வளவு பெரிய அற்புதம்!

மோசே வனாந்தரத்தில் இருந்த பாறையில் கோலினால் அடித்தபோது, சுமார் 30 லட்சத்திற்கும் அதிகமாக இருந்த இஸ்ரவேல் மக்களும், அன்றைக்கு அவர்களிடத்தில் இருந்த அனைத்து மிருக ஜீவன்களும் குடிப்பதற்கு வேண்டிய தண்ணீர், அந்தப் பாறைக்குள் இருந்து ஒரு ஆறு போலப் புறப்பட்டு வந்தது!

அவ்வளவு பெரிய அற்புதங்களைக் கண்டவர் மோசே! அப்படிப்பட்ட மோசே கர்த்தரைப் பார்த்து, "உம்முடைய மகத்தான வல்லமையையும், பயங்கரமான அற்புதங்களையும் பார்த்து விட்டேன்! அவைகளை எல்லாம் பார்த்து எனக்கு சந்தோஷம் இல்லை. உம்முடைய மகிமையை எனக்குக் காண்பியும். உம்முடைய முகத்தை நான் பார்க்க வேண்டும். அதுதான் எனக்கு முக்கியம்." என்று சொன்னார்.

அதற்கு கர்த்தர், "என்னைப் பார்க்கிற ஒருவனும் உயிரோடு இருக்க முடியாது. ஏனென்றால், என் மகிமை அவ்வளவு மகத்துவமானது! நான் அவ்வளவு மகிமையுள்ள தேவன்! ஆனாலும் நீ என்னை தாகத்தோடு தேடுகிறபடியினால், என்னை உனக்கு வெளிப்படுத்துகிறேன். நான் சொல்கிற கன்மலையில் நீ வந்து நில். நான் அதைக் கடந்து போவேன். அப்பொழுது என் முகத்தை உன்னால் பார்க்க முடியாது. ஆனால், என்னுடைய பின் பகுதியை மட்டும் பார்க்க நான் உனக்கு அனுமதி கொடுக்கிறேன்." என்று சொல்லி, மோசேக்கு கர்த்தர் தன்னை வெளிப்படுத்தினார். **(யாத். 33:18-23)**.

**"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை,..."** **(யோவான் 1:18)** என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது.

கர்த்தரை எவராலும் பார்க்க முடியாது! காரணம், அவருடைய மகிமை அவ்வளவு பயங்கரமானது!

ஆனால், இயேசு கிறிஸ்துவைப் பார்க்க முடியும்! காரணம்,

**“அவர் (இயேசு) தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.”** பிலி. 2:6–7.

ஆகவே, **இயேசு கிறிஸ்துவை நம்மால் தரிசிக்க முடியும்!**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னை நமக்கு வெளிப்படுத்தத்தான் ஒரு ஏழ்மையின் கோலமெடுத்து இந்த பூமிக்கு வந்தார். அதனால்தான், உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை பரி. பவுலால் தரிசிக்க முடிந்தது.

இயேசு கிறிஸ்துவும் பிரகாசமான மகிமையைக் கொண்டவர்தான். ஆனாலும், அவருடைய பிள்ளைகளாக இருக்கிறவர்கள் அவரைப் பார்க்க விரும்பும்போது, தன் மகிமையை அடக்கிக் கொண்டு, தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். அவர் தன்னுடைய மகிமையைத் துறந்து, நம்மைப்போல ஒரு மனிதனாக அவதரித்து வந்ததினால்தான், “என் பிள்ளைகள் என்னைப் பார்க்கட்டும்! என்னை தரிசிக்கட்டும்!” என்று, தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். ஆகவே, **நீங்களும் கர்த்தரைத் தேடுங்கள். அவர் உங்களுக்கு தன்னை வெளிப்படுத்துவார்.**

“இயேசு கிறிஸ்துவைப் பார்க்க முடியாது!” என்று யாராவது சொன்னால், அவர்கள் சோம்பேறிக் கிறிஸ்தவர்கள்! உபவாசித்து ஜெபிக்க மனமற்ற கிறிஸ்தவர்கள்! அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தேடுவதும் கிடையாது! ஜெபிப்பதும் கிடையாது!

“ஜெபம் எல்லாம் தேவையில்லை! அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே!” என்று எதையாவது சொல்லிக் கொண்டு, தேவ பிள்ளைகளைப் போல நடித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களும் ஜெபிப்பதில்லை! ஜெபிக்கிறவர்களையும் ஜெபிக்க விடுவதில்லை! இன்றைக்கு அப்படிப்பட்ட அனேக சோம்பேறி ஊழியர்கள் தேசத்தில் பெருவாரியாகப் பெருகிக் கொண்டு இருக்கிறார்கள்! தங்கள் பெயருக்காக, புகழுக்காக விளம்பரம் செய்து கொண்டிருக்கிற பொல்லாத ஊழியர்கள் இன்றைக்கு இந்த உலகத்திலே தோன்றி இருக்கிறார்கள்!

எனக்கு அன்பானவர்களே, **உங்களாலும் இயேசு கிறிஸ்துவைப் பார்க்க முடியும்! உங்களாலும் அவரோடு பேச முடியும்!**
சரி, அப்படியானால், சும்மா ஒரு 5 நிமிடத்தில் அவரைப் பார்த்து விட

முடியுமா? ஒரு முதலமைச்சரைப் பார்க்க வேண்டுமென்றால் கூட, மணிக் கணக்காகக் காத்துக் கிடக்க வேண்டியதிருக்கிறது! இவ்வளவுக்கும் அந்தப் பதவி ஒரு 5 வருடங்களுக்குத்தான்! நிரந்திரமும் கிடையாது! ஆக, ஒரு சாதாரண மனிதனைப் போய் பார்க்க வேண்டும் என்றால் கூட, எவ்வளவு கட்டுப்பாடுகள்! எத்தனை மணி நேரக் காத்திருப்புகள்!

காரியம் இப்படியிருக்க, கர்த்தராகிய தேவன் எவ்வளவு பெரியவர்! எவ்வளவு மகத்துவமுள்ளவர்! நினைத்த மாத்திரத்தில் சும்மா ஒரு 5 நிமிடத்தில் அவரைப் பார்த்து விட முடியுமா? யோசித்துப் பாருங்கள். **உபவாசம் பண்ணி, விலைக் கிரையம் கொடுத்து, தேவ சமூகத்தில் காத்திருங்கள்**. அப்பொழுது அவர் உங்களுக்கு தன்னை வெளிப்படுத்துவார். அவரை தரிசிப்பது, எவ்வளவு பெரிய பாக்கியம்! ஆகவே, "என்னைத் தேடு, என் முகத்தைத் தேடு." என்று கர்த்தர் சொல்கிறார். **நீங்கள் அவரைப் பார்க்க வாஞ்சிப்பதை விட, தன்னை அவர் உங்களுக்கு வெளிப்படுத்த மிகுந்த ஆவலோடு இருக்கிறார்.**

**ஒருமுறை, சென்னையில் ஒரு ஜெபக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்கள். ''கூட்டம் முடிந்த பிறகு கடைசியில் தனித்தனியாக உங்களை சந்தித்து ஜெபிக்கிறேன்.'' என்று சொல்லியிருந்தேன். ஆனால், குடும்பம் குடும்பமாக என்னிடத்தில் ஜெபிக்க வந்து விட்டார்கள்! அன்று இரவு நான் ஜெபிக்க ஆரம்பித்து, முடியும்போது மறுநாள் காலை 6:00 மணிக்கு மேல் ஆகி விட்டது! ''இந்த ஊழியக்காரனைப் பார்த்து, அவரிடத்தில் ஜெபித்து விட வேண்டும்.'' என்று, அன்று இரவு முழுவதும் அந்த ஜனங்கள் காத்திருந்தார்கள். அப்பொழுது நான், ''இவர்கள் தங்கள் வீட்டிற்குள் முழங்கால்படியிட்டு, இயேசு கிறிஸ்துவின் பாதபடியில் காத்திருந்து ஜெபித்திருந்தால், அவரே இறங்கி வந்து இவர்களிடத்தில் பேசியிருப்பாரே!'' என்று எண்ணினேன்.**

பாருங்கள், ஒரு ஊழியக்காரனைத் தேடுகிற அளவிற்குக் கூட, அனேக தேவ பிள்ளைகள் இன்றைக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தேடுவதில்லை!

"இயேசு கிறிஸ்துவைப் பார்க்க முடியாது! அவரோடு பேச முடியாது!" என்று, சில சோம்பேறி ஊழியக்காரர்கள் சொல்கிறதைக் கேட்டுக் கொண்டு, அனேக கிறிஸ்தவர்கள் கூட இயேசு கிறிஸ்துவை தவறாகப் புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

அப்படியல்ல! நம்மால் அவரை தரிசிக்க முடியும்! அவரைப் பார்க்க முடியும்! அவர் நமக்கு தன்னை வெளிப்படுத்தத்தான் ஒரு ஏழ்மையின் கோலமெடுத்து இந்த பூமிக்கு வந்தார். இன்றைக்கு இந்துக்களும்,

முஸ்லீம்களும், சீக்கியர்களும் கூட இயேசு கிறிஸ்துவை தரிசிக்கிறார்கள்! ஆனால், இந்தப் ‘பாரம்பரிய’ சோம்பேறிக் கிறிஸ்தவர்கள்தான், இயேசு கிறிஸ்துவை தரிசிக்க மனமற்றவர்களாக இருக்கிறார்கள்!

இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இப்படியே இருக்கப் போகிறோம்? கர்த்தருக்கு நாம் எவ்வளவு நேரம் கொடுக்கிறோம்? **தினமும் காலையில் எழும்பி, எவ்வளவு நேரம் தேவ சமூகத்தில் காத்திருக்கிறோம்?**

செல் போனை காதில் வைத்துக் கொண்டு, மணிக்கணக்காக உட்கார்ந்து பேசுகிறோமே! **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் பேசுவதற்கு, ஒரு நாளைக்கு 1 மணி நேரமாவது நேரம் கொடுக்கிறோமோ?** சற்று யோசித்துப் பாருங்கள்.

அவருடைய முகத்தைத் தேடுங்கள்! “ஆண்டவரே, நான் உம்மைப் பார்க்க வேண்டும். நீர் என்னிடத்தில் பேசாத பட்சத்தில் நான் உம்முடைய சமூகத்தை விட்டுப் போகவே மாட்டேன்!” என்று சொல்லி, உபவாசம் பண்ணி தேவ சமூகத்தில் காத்திருங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களோடு கூட பேசுவார். அவர் உங்களோடு பேச, எப்பொழுதும் ஆயத்தமாகவே இருக்கிறார்.

“யஸர் என்னை முழு இருதயத்தோடு தேடுகிறார்களோ, அவர்களுக்கு நான் என்னை வெளிப்படுத்துவேன்!” என்று, மிகுந்த ஆவலோடு கர்த்தர் காத்திருக்கிறார்.

“ஐயோ, அதற்கு நான் தகுதியே இல்லை! நான் ஒரு பாவி! என்னிடத்தில் எல்லாம் இயேசு கிறிஸ்து பேசுவாரா?” என்று நினைக்கிறீர்களோ?

எனக்கு அன்பானவர்களே, அவரிடத்தில் பேசுவதற்கு அதுதான் உண்மையான தகுதி! “நான் தகுதியில்லாதவன்!” என்று யார் தங்களை நினைக்கிறார்களோ, அவர்களிடத்தில்தான் கர்த்தர் பேசுவார். காரணம், அதுதான் தகுதி!

“எனக்கு என்ன தகுதி இருக்கிறது?” என்று, நீங்கள் உங்களைக் குறித்து நினைத்திருக்கிற தகுதியை எல்லாம் கர்த்தர் பார்ப்பதில்லை.

**சில வேளைகளில், ‘‘கர்த்தர் என்னிடத்தில் பேசுவதற்கும், அவருடைய ஊழியத்தை நான் செய்வதற்கும் எனக்கு என்ன தகுதி இருக்கிறது?’’ என்று, என்னையே நான் யோசித்துப் பார்ப்பேன். உண்மையிலேயே நான் தகுதியுள்ளவன் அல்ல. என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என் மீது வைத்த கிருபையினாலேதான், இன்றைக்கு நானும் ஒரு ஊழியக்காரனாக நின்று கொண்டிருக்கிறேன்.**

அவருடைய ஊழியத்தைச் செய்ய நான் எள்ளளவும் அருகதையற்றவன். காரணம், நான் அவரைப் பரிகாசம் பண்ணி, மிகவும் கேவலமாகப் பேசி, மிகக் கடுமையாக தூஷித்தவன்! ஆனாலும், அவருடைய கிருபை என்னையும் ஒரு ஊழியக்காரனாக மாற்றி, ''நான் உன்னோடு கூட இருக்கிறேன்.'' என்று சொல்லி, அவர்தான் என்னை தகுதிப்படுத்தி இருக்கிறார், அவ்வளவுதான்! ''நான் ஒரு ஊழியக்காரன்!'' என்று சொல்லிக் கொள்ள, எனக்கு என்ன தகுதி இருக்கிறது?

ஒன்றுமில்லை! அவருடைய கிருபை ஒன்றுதான்!

நம்முடைய தகுதியை விட, அவருடைய கிருபை மகாப் பெரியது. தாகத்தோடு அவரைத் தேடினால் போதும், தன்னை நமக்கு வெளிப்படுத்துவார். ஜெபத்திலே கர்த்தரைத் தேடுங்கள்! வேத வசனத்தின் மூலமாக அவரைத் தேடுங்கள்! வேதாகமத்தை முழங்காலில் நின்று வாசித்து, அவரை தியானியுங்கள்!

"ஆண்டவரே, நீர் என்னோடு கூடப் பேசும்." என்று சொல்லுங்கள். வேத வசனத்தின் மூலமாக அவர் உங்களோடு கூடப் பேசுவார்! அல்லது பரிசுத்த ஆவியானவர் மூலமாக உங்கள் இருதயத்தில் பேசுவார்! அல்லது தரிசனத்தின் மூலமாக உங்களோடு கூடப் பேசுவார்! அல்லது நேரடியாகவே தன் வார்த்தையின் மூலமாக அவர் உங்களோடு கூடப் பேசுவார்!

"கர்த்தர் எல்லா நாளும் ஒரே மாதிரியாகத்தான் பேசுவார்!" என்று நினைக்காதீர்கள். அவர் உங்களோடு பேசுவதை, உங்கள் ஆவியில் உங்களால் நன்றாக உணர முடியும். பரிசுத்த ஆவியானவர் மூலமாக, அதிகமாக நம்முடைய ஆவியிலே கர்த்தர் பேசுவார். நீங்கள் அந்த அனுபவத்தில் வளர வளர, மிக அருமையாக அவருடைய குரலை உங்களால் கேட்க முடியும். அவர் உங்களோடு பேச வேண்டுமென்றால், 'ஜெப அறைக்குள் போய் முழங்கால்படியிட்டு இருந்தால்தான் பேசுவார்.' என்றல்ல.

நீங்கள் அதில் பழகிப் பழகி, கர்த்தரோடு நெருங்கி விட்டீர்கள் என்றால், உங்களுடைய வாழ்க்கையில், நீங்கள் போக்குவரத்தில் இருக்கும்போது கூட, அவர் உங்களோடு பேசுவதை உங்களால் உணர முடியும். உங்கள் பக்கத்தில் வந்து அவர் உங்களோடு பேசுவதை உங்களால் உணர முடியும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவ்வளவு அற்புதமானவர்!

ஒரு எஸ்டேட்டில் 'கண்காணி'யாக வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு சகோதரர், தன் அனுபவத்தை இப்படியாக என்னிடத்தில் சொன்னார். அவர் தினமும் அதிகாலையில் எழுந்து

ஜெபிக்கிற ஒரு தேவ மனிதர். அவருக்குக் கீழ் வேலை செய்கிற ஆயிரக்கணக்கான தொழிலாளிகளை அவர் கண்காணித்துக் கொண்டிருந்தார். இவர்தான் சம்பளப் பணத்தை வாங்கி, அவர்களுக்கு பட்டுவாடா செய்ய வேண்டும்.

ஒருமுறை மேனேஜரிடத்தில் போய் சம்பளப் பட்டியலைக் காண்பித்து, பணத்தை வாங்குவதற்காகப் போயிருந்தார். அவர் எல்லாவற்றையும் சரி பார்த்து, வங்கியில் இருந்து எடுத்துக் கொண்டு வந்திருந்த அந்த மாதத்திற்குரிய சம்பளப் பணத்தை எடுத்து, ''இதை சரி பார்த்து எடுத்துக் கொள்ளுங்கள்.'' என்று சொல்லி, மேஜையின் மீது வைத்தார்.

அதில் 1,000 ரூபாய் நோட்டுக் கட்டுகள் இருந்தது. 500 ரூபாய் நோட்டுக் கட்டுகள் இருந்தது. 100 ரூபாய் நோட்டுக் கட்டுகள் 3 இருந்தது. அந்த 100 ரூபாய் நோட்டுக் கட்டுகளை எடுப்பதற்காக அவர் தன் கையை நீட்டியபோது, ''மகனே, 100 ரூபாய் நோட்டுக் கட்டுகளை எண்ணாமல் எடுக்காதே.'' என்று பரிசுத்த ஆவியானவர் அவரோடு பேசினார்.

அந்த சகோதரர் என்னிடத்தில் பேசும்போது, ''கர்த்தர் என்னிடத்தில் தெளிவாகப் பேசினார் பிரதர்!'' என்று சொன்னார். ''சரி ஆண்டவரே!'' என்று சொல்லி விட்டு, ''இந்த ரூபாய் நோட்டுகளை நான் எண்ணி எடுத்துக் கொள்ளட்டுமா?'' என்று, அந்த மேனேஜரிடத்தில் கேட்டார்.

அவர் சிரித்துக் கொண்டே, ''வங்கியில் இருந்து எடுத்துக் கொண்டு வந்ததுதான்! எண்ண வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் பரவாயில்லை. உங்கள் விருப்பப்படியே எண்ணி எடுத்துக் கொள்ளுங்கள்.'' என்று சொல்லி விட்டார். முதல் 2 கட்டுகளை எண்ணிப் பார்த்தபோது, எல்லாம் சரியாக இருந்தது. ''அப்படியானால், கர்த்தர் என்னிடத்தில் பேசியது...!'' என்று எண்ணிக் கொண்டே, 3வது கட்டை எடுத்து எண்ணிப் பார்த்தபோது, அதில் 97 நோட்டுகள்தான் இருந்தது. 3 நூறு ரூபாய் நோட்டுகள் இல்லை!

பாருங்கள், அந்தப் பணம் வங்கியில் இருந்து வந்திருக்கிறது! சீல் வைக்கப்பட்டு இருக்கிறது! உண்மைதான்! ஆனால், ''அதில், 3 நூறு ரூபாய் நோட்டுகள் இல்லை!'' என்பது கர்த்தருக்குத் தெரிந்தது. ''பிரதர், சின்னச் சின்னக் காரியத்தில் கூட கர்த்தர் என்னோடு பேசுகிறார்.'' என்று சொன்னார். அதைக் கேட்ட எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

அந்த ரூபாய் கட்டை அந்த மேனேஜரிடம் திரும்பக் கொடுத்தார். அவரும் எண்ணிப் பார்த்தபோது, 97 நோட்டுகள்தான் இருந்தது.

திரும்பவும் எண்ணினார், 97தான் இருந்தது. மிகவும் ஆச்சரியம்!

பாருங்கள், அந்த சகோதரர் அதை எண்ணாமல் எடுத்துக் கொண்டு போயிருந்தால், அவருக்குத்தான் நஷ்டம்! அந்த 300 ரூபாயை அவர்தான் தன் கையிலிருந்து கொடுத்திருக்க வேண்டும். கர்த்தர் பார்க்கிறார்! "என் பிள்ளைக்கு எந்த நஷ்டமும் வரக் கூடாது. 3 நோட்டுகள் குறைவாக இருக்கிறது. எண்ணி எடு." என்று சொல்லி, அந்த சகோதரரை மிக அழகாக நடத்தினார்.

நம்மை எவ்வளவு அழகாக நடத்துகிற, அற்புதமான கர்த்தர் நமக்கு இருக்கிறார் பாருங்கள்!

நீங்கள் எதைச் செய்ய வேண்டும்? நீங்கள் எதைச் செய்யக் கூடாது? என்று, உங்கள் தொழிலில், படிப்பில், வேலையில் உங்களை அழகாக நடத்துவார்.

ஒரு சமயம், நடுத்தர வயதுடைய, தொழில் செய்கிற ஒரு சகோதரர் ஜெபிக்கும்படியாக என்னிடத்தில் வந்தார். அவருடைய தகப்பனாரும் தொழில் செய்தவர். அவருடைய நாட்களில், தொழிலில் உண்டான சில கடன் பிரச்சனையினால் அதிகமாக நெருக்கப்பட்ட நிலைமையில், ஜெபிப்பதற்காக அடிக்கடி என்னிடத்தில் வருவார். அவருடைய காலத்திற்குப் பிறகு, அவருடைய மகனான இவர் அந்தத் தொழிலைப் பொறுப்பெடுத்து நடத்திக் கொண்டிருந்தார். இவர் வந்த பிறகு, தொழிலில் மிகுந்த ஆசீர்வாதம்! எல்லாம் வெற்றியாக இருந்தது! புதிய இடங்களை வாங்கி, புதிதாக தொழில் ஆரம்பித்தார்! எல்லாம் ஆசீர்வாதமாக இருந்தது!

நான் அவரிடத்தில், "தொழில் எப்படி இருக்கிறது பிரதர்?" என்று விசாரித்தேன். அதற்கு அவர், "கர்த்தர் நன்றாக ஆசீர்வதிக்கிறார்." என்று சொன்னார்.

அப்பொழுது நான், "உங்கள் தகப்பனார் கர்த்தருக்குப் பயந்த நல்ல ஒரு தேவ மனிதர். அந்தக் காலத்தில் தொழில் நிமித்தமாக மிகவும் கஷ்டப்பட்டார். அதற்காக அடிக்கடி என்னிடத்தில் ஜெபிக்க வருவார். நீங்கள் கையெடுத்த பிறகு, தொழில் இவ்வளவு ஆசீர்வாதமாக நடக்கிறதே! நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கிறதே! என்ன இரகசியம்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "நான் எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் கேட்டுத்தான் செய்வேன்." என்றுசொன்னார். அந்த வார்த்தையைக் கேட்ட எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. "அனேக ஊழியக்காரர்கள் கூட அப்படிச் செய்வதில்லையே! ஒரு தொழில் செய்கிறவரான நீங்கள்

கர்த்தரிடத்தில் கேட்டுச் செய்கிறீர்கள்! அதைப் பற்றிய உங்களுடைய அனுபவத்தைக் கொஞ்சம் சொல்லுங்கள்.'' என்றேன்.

அப்பொழுது அவர், ''தினமும் குறைந்தது 1 மணி நேரம், அல்லது 2 மணி நேரம் ஜெபித்து விட்டுத்தான் தொழிலுக்குப் போவேன். அந்த ஜெப நேரத்தில், இந்தியாவின் எழுப்புதலுக்காக ஜெபம் பண்ணுவேன். ஜெபிக்காமல் நான் வெளியே போகவே மாட்டேன்.

புதிதாக ஒரு தொழில் செய்ய வேண்டுமானால், உபவாசம் பண்ணி, ''இயேசுவே, இந்த இடத்தை வாங்கலாமா? இந்தத் தொழிலை நான் செய்யலாமா?'' என்று, கர்த்தரிடத்தில் நான் காத்திருந்து விசாரிக்கும்போது, அவர் என்னோடு பேசுவார்.'' என்று சொன்னார்.

''கர்த்தர் எப்படி உங்களோடு பேசுவார்? அதைப் பற்றிச் சொல்லுங்கள்...'' என்று அவரிடத்தில் கேட்டபோது, ''நான் அபிஷேகம் பெற்றிருக்கிறேன். ஆவியில் நிறைந்து அன்னிய பாஷையில் ஜெபம் பண்ணுவேன். அப்பொழுது, பரிசுத்த ஆவியானவர் மூலமாக என் உள்ளத்தில் கர்த்தர் தெளிவாகப் பேசுவார்.

அவர் சொல்கிறபடி நான் செய்கிறபடியினால்தான், எல்லாமே எனக்கு வெற்றி! எல்லாமே எனக்கு ஆசீர்வாதம்!'' என்று சொன்னார். இப்படிப்பட்ட எத்தனையோ பேர்களை என்னுடைய ஊழியப் பாதையில் நான் பார்த்திருக்கிறேன்.

எனக்கு அன்பானவர்களே, நம்முடைய கர்த்தர் நம்மோடு கூடப் பேசுகிறவர்! நமக்கு நல்ல ஆலோசனை கொடுத்து, நம்மை நடத்துகிறவர்! அவருடைய சமூகத்தில் முழங்காலில் நில்லுங்கள்! **அவருடைய முகத்தைத் தேடுங்கள்! அவருடைய சமூகத்தில் காத்திருங்கள்!** வேத வசனங்களை வாசித்து, தியானியுங்கள்! குறைந்தது ஒருமணி நேரமாவது, அல்லது இரண்டு மணி நேரமாவது **அவரைத் தேட நேரம் கொடுங்கள்**.

'பெயருக்காக சும்மா ஒரு வேத வாசிப்பு! பெயருக்காக ஒரு ஜெபம்!' என்கிற அனுபவத்தில் இருக்கிறவர்களோடு கர்த்தர் பேச முடியாது. அவருடைய பாதத்தில் அமர்ந்திருங்கள். அவர் உங்களிடத்தில் பேச இடம் கொடுங்கள். அப்பொழுது நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும். உசியா ராஜா கர்த்தரைத் தேடியபடியினால், அவர் செய்ததெல்லாம் வாய்த்தது. நீங்களும் கர்த்தரை முழு இருதயத்தோடு தேடுங்கள். அவரிடத்தில் ஆலோசனை கேளுங்கள்.

' பிள்ளைகளுடைய திருமணக் காரியம்!', 'வேலைக் காரியம்!' என்றால், ஊழியக்காரர்களைத் தேடுகிறீர்கள் அல்லவா? ஊழியக்காரர்களிடம் சொல்லி ஜெபிப்பது தவறல்ல. அது பாவமும் அல்ல. அவர்கள் உங்களுக்காக ஜெபிப்பார்கள். அதுவும் தவறல்ல. ஆனால்,

நீங்கள் கர்த்தரிடத்தில் கேட்காமல், ஊழியக்காரர்களை மாத்திரம் தேடி ஓடுகிறீர்களே! அதுதான் தவறு.

முதலாவது, கர்த்தரைத் தேடுங்கள். கர்த்தர் மிக அழகாக உங்களுக்கு ஆலோசனை கொடுத்து நடத்துவார். உங்கள் தொழில் காரியம் வாய்க்க வேண்டுமா? **வாரத்தில் ஒருநாள் உபவாசம் பண்ணி, ஜெபம் பண்ணிப் பாருங்கள். மிக அழகாக கர்த்தர் உங்களை நடத்துவார்.** ஜெபமே செய்யாமல், சும்மா சோம்பேறியாகவே இருந்து கொண்டு, ஊழியக்காரர்களைத் தேடிப் போய், ஜெபிக்கும்படியாக அவர்களிடத்தில் தலையைக் கொடுத்து விட்டால், "எல்லாக் காரியமும் நடந்து விடும்!" என்று எதிர்பார்த்தால் எப்படி? கர்த்தர் எப்படி ஆசீர்வதிக்க முடியும்? ஆகவே, நீங்கள் கர்த்தரைத்தான் தேட வேண்டும்.

"இந்த வாக்குத்தத்தம் என்னுடைய வாழ்க்கையில் நிறைவேற வேண்டும். இந்த வருடத்தில், எங்கள் குடும்பத்தில் என்ன செய்யப் போகிறீர் ஆண்டவரே?" என்று சொல்லி, காத்திருந்து ஜெபிக்க வேண்டும். **உங்களுடைய நேரத்தை கர்த்தருக்குக் கொடுங்கள். கர்த்தருடைய பிரசன்னத்தைத் தேடுங்கள்.** வேறு ஏதாவது கடினமான காரியத்தைச் செய்யும்படியாக கர்த்தர் உங்களுக்குச் சொல்லவில்லையே! அவர் நம்மை செய்யச் சொல்வது, மிகவும் எளிமையானதுதான். அவருடைய பாதத்தில் உட்கார்ந்திருந்து ஜெபிப்பது கடுமையான ஒரு காரியமா?

அவருடைய பிரசன்னம் அவ்வளவு இனிமையானது! அதை அனுபவித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து எவ்வளவு இனிமையானவர் தெரியுமா? "அவர் எவ்வளவு இனிமையானவர்!" என்று, ஜெப அறையில் போய் அவருடைய பாதபடியில் உட்கார்ந்தால்தான் தெரியும்.

ஒரு பக்கம் நல்ல ஒரு தாயாக, நல்ல ஒரு தகப்பனாக, நல்ல ஒரு நண்பனாக நம் மீது கை போட்டுக் கொண்டு மிகுந்த பாசத்தோடு பேசுவார். எவ்வளவு அற்புதமான, அன்பான கர்த்தர் அவர் தெரியுமா? அவரை ருசித்துப் பாருங்கள்! அவரை அனுபவியுங்கள்! அவரோடு நீங்கள் நேரம் செலவிடுங்கள்!

வேத வசனங்களை வாசித்து, தியானித்துத் தியானித்து, துதித்துத் துதித்து, அவருடைய பிரசன்னத்தில் களிகூருங்கள். அதுதான் எத்தனை கோடிகளைக் கொடுத்தாலும் கிடைக்காத, மிகவும் இனிமையான, மகிமையான கிறிஸ்தவ வாழ்க்கை! அதை விடப் பெரிய சந்தோஷம் என்ன இருக்கிறது? அவரோடு வாழ்ந்து பாருங்கள்! இயேசு கிறிஸ்துவோடு வாழ்வதை விட, பெரிய பாக்கியம் இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை!

விசுவாசத்தோடு ஜெபியுங்கள், காரியங்கள் வாய்க்கும்!

என் ஆத்தும நேசரே, உமக்கு ஸ்தோத்திரம்! நீர் என்னோடு பேசியதற்காக உமக்கு ஸ்தோத்திரம்!

நான் எப்பொழுதும் உமக்குப் பிரியமானதைச் செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன்!

நீர் விரும்புகிறதை மாத்திரம் எப்பொழுதும் செய்ய எனக்குக் கிருபை தாரும்! உம் முகத்தை ஆவலோடு தேடுகிறேன்! உம் சாயலை தரிசிக்க, உம் குரலைக் கேட்க ஆசையோடு இருக்கிறேன்! எனக்கும் உம்மை வெளிப்படுத்தும்!

‘‘என் முகத்தைத் தேடுங்கள்!’’ என்று சொன்னீரே! உம் முகத்தை நான் தேடுகிறேன்! ‘‘உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினால்... நான் உங்களுக்குக் காணப்படுவேன்.’’ என்று சொல்லியிருக்கிறீரே! நானும் முழு இருதயத்தோடு உம்மைத் தேடுகிறேன்!

என்னோடு பேசும்! எனக்கு ஆலோசனை தாரும்! என்னை வழி நடத்தும்! என் காரியங்களை வாய்க்கச் செய்யும்! உம்முடைய வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கிறேன்! அற்புதங்களை எதிர்பார்க்கிறேன்!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டுகிறேன்! ஆமென்! ஆமென்!




Believe,
The Lord will
Prosper your Ways!
Jesus Redeems MINISTRIES
Nalumavadi - 628 211, Thoothukudi Dt., T.N., India.
+91- 4639 220000 | +91 - 81110 71000
For More Details:
+91 - 94881 75315
prayer@jesusredeems.org
Web: www..jesusredeems.org
Watch our programs:
jesusredeemsministries
comfortertv.com
mohanclazarus / podcast